

# மீட்க்க
# கூடாதபடிக்கு
# நாங்கள்
# கூடாதவார்களா ?

*[A 7-minutes sermon preached by Pastor Alun McNabb (www.sermonfortoday.org).*

*Reproduced by Shalom Church, with minor editing. By Permission.]*

# மீட்க்க கூடாதபடிக்கு நாங்கள் கூடாதவார்களா ?

அனேகர் தம்மை மிகவும் நல்லவர்களாக எண்ணுவதினால் இறைவனின் இரட்சிப்பானது தமக்கு தேவையற்றதாக எண்ணுவதனை அறிந்திருக்கின்றோம். இது பொதுவான வெளிப்படாகும். நாம் அன்றாடம் பழகுபவர்கள், கதைப்பவர்கள் தங்களை மிகவும் நல்லவர்களாக எண்ணுகிண்றனர். ஆனால் சிலர் இதற்கு எதிர்மாறாகவும் சிந்திப்பதுண்டு. அவர்கள் தங்களை மோசமானவர்களாகவும் மீட்கப்படுவதற்கு தகுதியற்றவர்களாகவும் எண்ணுகின்றனர். நான் என்ன செய்தேன் என்று உங்களுக்கு தெரியாது; எப்படி இருந்தேன் என்று உங்களுக்கு தெரியாது; கடவுளுக்கு என்னத் தேவைப்படாமல் இருக்கலாம் எனச் சிலர் கூறுகின்றனர்.

நீங்களும் இவர்களில் ஒருவராக இருக்கலாம். இப்படி சிந்திப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் என்று வேதாகமம் கூறுகின்றது. உண்மையிலேயே பெரும்பாலானவர்கள் தம்முடய பிழைகளையும் பாவங்களையும் மறைப்பதற்கு பல காரணங்களை சொல்லுகிறவர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறாக சாட்டு சொல்கின்றவர்கள்: "ஆம் நான் மிகவும் நல்லவன் அல்லது சிலவேளை கூடாதவனாக இருக்கலாம்" என்கிறார்கள். இதற்காக இவர்கள் பல காரணங்களை சொல்லுகிறவர்களாக இருக்கின்றார்களே, தவிர இறைவனுக்கு முன்பாக சரியானதினைச் செய்வதைக் குறித்து ஒரு போதும் அக்கறை கொண்டிராதவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் உண்மையிலேயே நீங்கள் உங்களை கூடாதவர்களாக எண்ணுபவர்களாக இருந்தால் உங்களுக்கு சில அநுகூலமான ஆலோசனைகளை கூறலாம் என நினைக்கின்றோம்.

நாங்கள் மீட்கப்படக் கூடாதபடிக்கு மிகவும் மோசமானவர்கள் அல்ல என்று வேதம் கூறுகின்றது. நீங்கள் அக்கறையற்றவர்களாக இருக்கலாம். நீங்கள் மிகவும் வித்தியாசமனவர்களாக இருக்கலாம் அல்லது நீங்கள் பெருமிதம் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் நீங்கள் மிகவும் மோசமானவர்களல்ல. இறைவனினால் உங்கள் பாவங்கள் மன்னிக்க முடியும். நீங்கள் உங்களை மிகவும் கூடாதவர்களாக எண்ணுகின்றீர்கள். ஆனால் இறைவன் உங்களுக்காக மிகவும் முக்கியமான ஒன்றினை செய்திருக்கின்றார். எனவே மிகவும் கவனமாக செவி கொடுங்கள்.

இக்கதையானது கொடூரமானவர்களை கிறிஸ்துவான இறைவனிடம் சேர உற்சாகமளிக்கின்றது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்ற வார்த்தையைக் கேளுங்கள்.

1 திமோத்தேயு 1:12-14

> என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.
>
> முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமைசெய்கிறவனுமாயிருந்தேன். அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்.
>
> நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று.

மேலும் இதனை கவனியுங்கள்.

> பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்.
>
> அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்.

இந்த செய்தியினைப் புரிந்து கொண்டீர்களா? இவ் அற்புதமானது அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விடத்தில் "நான் பிரதான பாவி, கொடூரமான பாவி" மேலும் “முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமைசெய்கிறவனுமாயிருந்தேன். .." என்று சொல்லுகிறார்.

பவுல் கிறிஸ்தவர்களை எதிர்தான், அவர்களை கொலை செய்தான் கிறிஸ்தவர்களை அழிப்பதும் கொலை செய்வதுமே பவுலின் வாழ்க்கையின் நோக்கமாக காணப்பட்டது, மது அருந்தி விட்டு யாரையும் அடித்துப் போடவில்லை அவன் கிறிஸ்தவர்களை கொலை செய்வதனையே பிரதான நோக்கமாக கொண்டிருந்தான். எனினும் பவுல் தான் செய்தவற்றை ஒப்புக் கொள்வது வியக்கத்தக்கது. கடவுள் கொடூரமானவர்கள் மேல் அளவிட முடியாத பொறுமையினை கொண்டிருக்கின்றார். இது அவரை விசுவாசிப்பவர்களின் உதாரணமாகவே இருக்கின்றது. இன்று இது உங்களின் வாழ்க்கையிலும் ஒரு உதாரணமாக மாறலாம்.

பவுல் சொல்லுகின்றார்:

“பாவிகளில் பிரதான பாவி நான்,கிறிஸ்து என்னில் பொறுமையாயிருந்து பாவங்களை மன்னித்தால், உஙகளையும் மன்னிப்பது நிச்சயம். என் மேல் கிருபயாய் இருந்தால், உங்கள் மேல் கிருபயாய் இருப்பது நிச்சயம்" மீட்க்க கூடாதபடிக்கு நாங்கள் கூடாதவார்களா **?**

கிறிஸ்துவானவர் பாவிகளை மீட்கவே இவ் உலகத்திற்கு வந்தார். தன்னுடயவர்களின் பாவங்களை தீர்க்க சிலுவையில் மரித்தார், எமக்காக தண்டணையியை ஏற்றுக் கொண்டார். உங்களைக் கூடாதவராக உணர்கின்றீர்களா? நீங்கள் மீட்பதற்கு தகுதியானவர்கள் அல்ல என்று நினைக்கின்றீர்களா? கடவுளை அறிய விரும்பாதபடிக்கு தடைகளை உணர்கின்றீர்களா? நீங்கள் இறைவனை அறியக் கூடாத அளவிற்கு மோசமானவர் அல்ல என்பதனை கூற இறைவனின் அனுமதியுடன் உங்களிடம் வருகின்றோம். உங்களை தகுதியற்றவர்களாக சிந்திக்கச் செய்வது சாத்தானின் பொய்யாகும். நீங்கள் பவுலைப்போல இருக்கலாம். எனினும் உங்களின் எல்லா பாவங்களையும் கிறிஸ்துவிடம் கொண்டு வாருங்கள், கிருபையினை கண்டடையலாம்.

சால்ஸ் வெஸ்லி என்ற இறை விசுவாசி இவ்விதமாக சொல்லகின்றார்:

*இந்த கிருபை என்னை விடுதலையாக்கியது.*
*இறைவன் என் பாவங்களை,என்னை விட்டு நீக்கினார்.*
*நான் கிருபையினை கண்டடைந்தேன் எப்படி மோசமானவன் நான்,*
*எப்படிபட்ட பாவி நான், நான் மகிழ்ச்சியோடு சொல்லுகின்றேன் நீங்கள் கிறிஸ்து இயேசுவிடம் சேரும்போது என்னை மீட்ட கிறிஸ்து உங்களையும் மன்னிப்பார் .*
*இன்றே! இப்பொழுதே! வாருங்கள்...*

இயேசு கிறிஸ்துவை
பற்றி மேலும்
அறிய விரும்புகிறீர்களா ?

தயவு செய்து தொடர்பு கொள்ளவும்
போதகர் : வேயி யென் யீ - 6383-4676 (ஆங்கிலம்)
சகோதரன் : நந்தா 9728-5404 (தமிழ்)

ஞாயிறு ஆராதனைக்கு அன்போடு வரவேற்கிறோம்!
ஞாயிறு காலை 9.30 மணிக்கு

சாலோம் பாப்திஸ்து சபை

8 New Industrial Road, LHK3 Building,#03-01,Singapore 536200

